[1975 அக்டோபர் 31

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, செகண்டரி கல்வி போர்டு திருத்தியமைக்கப்பட்டதனால் கல்வித் துறையில் ஏற்படுகிற நடைமுறை மாறுதல் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, செகண்டரி கல்வி போர்டு எப்போதும் செய்து கொண்டு வருகிற அதே பணியைத்தான் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறது. ஏற்கெனவே தேர்வு ஆணையரும் பள்ளிக் கல்வி இயக்குநரும் ஒருவராக இருந்தார். தேர்வுக்கென்று தனி இயக்குநர் நியமித்துவிட்டதன் காரணமாக, செகண்டரி கல்வி போர்டு அவர் தலைமையின் கீழ் வருகிறது. தலைவர்தான் மாற்றப் பட்டிருக்கிறாரே தவிர வேறு வகையில் ஒன்றும் இல்லை.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாநிலம் முழுவதற்கும் ஒரே செகண்டரி கல்வி போர்டு இருந்து வருகிறது. இதை மாற்றி, மாநிலத்தில் நான்கு கல்வி போர்டுகள் அமைத்தால் எதிர்காலத்தில் அமைய இருக்கும் பல்கலைக் கழகத்தின் வரம்புக்கு உட்பட்டதாக இருக்கும். நான்கு கல்வி போர்டுகள் அமைக்கப்படாது ஒரே அதிகாரியின் கீழ் கொண்டு வரப்பட்டதால் ஏற்படும் திறமையின்மையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழகம் மூன்றாகவோ, நான்காகவோ அமைந் திருந்தாலும்கூட, பள்ளிக் கல்வியைப் பொறுத்த வரையில் ஒரே அமைப்பின் கீழ்தான் இயங்கிவருகிறது. அதற்கு ஒரே இயக்குநர்தான் இருந்து வருகிறார். தேர்வைப் பொறுத்த வரையில் மாநிலம் முழுவதும் ஒரே வகையில்தான் நடைபெற்று வருகிறது. ஆகவே, பாடத் திட்டங்கள், புத்தகங்கள், அதற்கு வரையறுக்கப்பட்ட பணிகளையெல்லாம் இந்த போர்டே கவனிக்க வேண்டியிருக்கிறது. நான்கு போர்டுகள் வைத்து நடத்துவ தென்பது இயலாத ஒன்று, ஒரே போர்டுதான் இருக்கவேண்டும். அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ற அளவுக்கும், சிலபஸ், டெக்ஸ்ட் புக்ஸ் போன்றவை பள்ளிக் கல்வி இயக்குநரின் தலைமையின்கீழ் வருவதாலும் தேர்வு நடத்துவது, சர்டிபிகேட் வழங்குவது போன்றவை தேர்வு இயக்குநரைச் சார்ந்திருப் பதாலும், இதனுடைய பொறுப்புகளை இரண்டாகப் பிரித்து